**தலைப்பு 287 – காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 287 – காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 26 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஜுன் 23 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களினால், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிக்கடைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பாக நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேதொத்ததாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்படடிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆண்டிற்காக திணைக்களத்திற்கு 04 செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 51.25 மில்லிள் நிதிஏற்பாட்டில் ரூபா 31.2 மில்லியன் நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது. அதாவது அது 23 சதவீதத்திற்கும் 96 சதவீதத்திற்கும் இடையிலானது. | ஏற்றுக் கொள்கிறேன்.<br>E-Title தொகுதியை மேம்படுத்த நிதி ஒதுக்கிய போதும் அத்தொகுதியின் அத்தியவசிய மேம்பாடுகளை குறைந்த கிரயத்தில் செய்து கொண்ட காரணத்தால் Server தொகுதியை கொள்வனவு செய்யும தேவைப்பாடு ஏற்பட்டது. மேலும் பழைய ஆவணங்களை ஸ்கேன் செய்து பாதுகாக்க மற்றும் பழைய ஆவணங்களை சீர்செய்து புனரமைக்க நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ள போதும், ஒப்பந்ததாரரினால் ரூபா 5.31 மில்லியன் பெறுமதியான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவைப்பாட்டை கருத்திற் கொண்டு நிதிஏற்பாடு கோரப்பட வேண்டும். |

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரினால் 2024 சனவரி 10 திகதிய இலக்கம் 01/2024 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியில் | 2024 ஆண்டில் நடாத்தப்பட்ட உலக காணி மாநாட்டிற்குரிய செலவுகளை உலக | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் |

| | | |
|---|---|---|
| குறிப்பிடப்படுவதன் பிரகாரம் வெளிநாட்டு அநுசரணை நிறுவனத்தினால் மொத்த கிரத்தையும் மேற்கொண்டால் அன்றி வெளிநாட்டு கற்கை /பயிற்சி/மாநாட்டிற்காக அலுவலர்களை பங்குபற்றச் செய்யக் கூடாததை போன்றே, நிதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 01/2015/01 மற்றும் 2015 மே 15 திகதிய சுற்றறிக்கையின் 04 (அ) பிரிவின் பிரகாரம் தங்குமிட மற்றும் ஆகார பானங்களிற்கான செலவுகளை வெளிநாட்டு அரசு அல்லது மானிய நிறுவனத்தினால் ஏற்காத போது மாத்திரம் இணைந்த படிகளை பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறாயினும் 2024 ஆண்டில் நடாத்தப்பட்ட உலக காணி மாநாட்டில் பங்குபற்றும் அலுவலர்களிற்கு அனைத்து வசதிகளையும் வழங்குவதாக உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவு முகாமையாளரின் 2024 மார்ச் 13 திகதிய கடிதத்தில் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் வசதிகள் வழங்கப்பட்டுள்ள போதும் இணைந்த படிகளாக ரூபா 0.354 மில்லயன் திணைக்கள அலுவலர் ஒருவரினால் எடுக்கப்பட்டிருந்தது. | வங்கியினால் ஏற்பதாக உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவு முகாமையாளரின் 2024.03.13 திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதற்கு பங்குபற்றவிருந்த அலுவலர்களான சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் முன்னால் செயலாளர் மற்றும் பணிப்பாளர் காணிக் கொள்கை, காணி உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகத்திற்காக செயலாளரினால் அமையப் படிகள், உபசரணை செலவுப் படிகள் மற்றும் வெப்ப உடை படிகள் அரச செலவில் செலுத்துவதற்காக சனாதிபதி செயலாளரின் அங்கீகாரத்திற்காக 2024.03.28 திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அக் கடிதத்திற்கு கிடைத்த பதிலின் பிரகாரம் காணி உரித்து நிர்ணய ஆணையாளர் நாயகத்திற்கு இணைந்த படிகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இணைந்த படிகள் செலுதததப்பட வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட 28 இன் 02/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது மற்றும் அதனை செயற்படுத்தும் போது பிம்சவிய நிகழ்சித் திட்டத்துடன் நேரடியாக தொடர்புபடும் நிறுவனங்களிடம் காணப்படும் இயலுமை மனித மற்றும் பௌதீக வளங்கள் அளவின் மூலம் மேற்கொள்ளவுள்ள கடமைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்படாது, நிகழ்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு இருந்தது. இந்த நிகழ்சித் திட்டத்தில் எந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது பற்றி எவ்வித திட்டமும் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. 1998 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிகழ்சித் திட்டத்திற்குரியதாக வேலை நிறைவு செய்யப்பட்ட மற்றும் பொது மக்களிற்கு உரிமை சான்றிதழ் வழங்கி நிறைவு செய்த பிரதேச செயலகமொன்று | பிம்சவிய நிகழ்சித் திட்டத்தை திட்டமிடல் 1998 இல் ஆரம்பிக்கப்பட்டு மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் மற்றும் 2002 இல் முன்மாதிரி கருத்திட்டமாக ஐந்து அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டம் 2007 இல் முடிவடைந்த பின்னர் திறைசேரி செலவின தலைப்பின் கீழ் காணி விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரிற்கு வழங்கி நிர்ணய திணைக்களத்திற்கு, நிலஅளவைத் திணைக்களத்திற்கு மற்றும் பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு சட்டத்தால் ஒப்படைத்துள்ள பணிகளை மேற்கொண்டு செயற்படுத்தும் நிகழ்சித் திட்டமொன்றாகும். அதன் பிரகாரம் 1998 இன் 21 இலக்க சட்டத்தின் 1 பிரிவின் கீழ் வலயங்களை நிர்ணயிப்பது காணி | செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தி இந்த நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருக்காததுடன் அந்த சான்றிதழ்களை வழங்கி அப் பணிகளை நிறைவுவடையும் திகதியை ஏனும் வழங்க முடியாத நிலைமையில் காணப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | விடயப் பொறுப்பு அமைச்சரினால் மேற்கொள்ளப்படுவதுடன் 2012 ஆண்டில் முழுத் தீவும் செயற்படும் பிரிவாக அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுறிக்கப்பட்டுள்ளது. | |

### 4.1.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1998 இன் 21 இலக்க உரிமை பதிவுசெய்யும் சட்டத்தின் பிரகாரம் பொது மக்களிற்கு தனிப்பட்ட ரீதியில் உரிமை உடைய காணிகளை நிலஅளவை செய்து உரிமை சான்றிதழ் வழங்குவதற்காக பிம்சவிய நிகழ்சித் திட்டம் இத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்தது. நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக செய்யப்பட்ட செலவிற்கு ஒப்பாக அடைந்து கொண்ட முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | 1998 இற்கு முன்னர் அனைத்து ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டது ஆரம்ப செயன்முறையின் மீது உறுதிகள் தயாரிக்கப்பட்டு அந்த உறுதிகளை ஆவணமாக பதிவு செய்வதன் மூலமாகும். 1998 இல் இந்த சட்டத்தை செயற்படுத்தி படிப்படியாக மிகவும் உயர்ந்த பெறுமதியுடைய உரிமை பதிவிற்காக பெயர்ந்து கொண்டிருந்தனர்.<br>1998 இலிருந்து இதுவரை நிகழ்சித் திட்டம் செயற்படுவதன் ஊடாக இலக்கை அடைந்து கொள்ளும் போது 2007 முதல் 2024 வரை செய்யப்பட்ட செலவுகள் மூலம் மேற்குறித்த பணியை அடைந்து கொள்ள செலவிடப்பட்டுள்ள தொகை மற்றும் ஒரு காணித் துண்டிற்கு ரூபா 22,000 ஆன செலவு செலவிடப்பட்டுள்ளதுடன் சாதாரண நிலஅளவையொன்றை செய்து காணியை பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கும் போது காணித் துண்டை நிலஅளவையிட செலவாகும் தொகையை விட குறைந்த தொகை ஒன்றாவதுடன் அந்த உரிமை பதிவின் மூலம் முழுமையான உரிமை சான்றிதழ் நபர்களின் கைகளில் வழங்கப்படும். அதன் பிரகாரம் செலவிடப்பட்டுள்ள அளவு ஒப்பீட்டு ரீதியாக மிகவும் குறைந்த தொகையாகும். | திட்டத்தை தயாரித்து மீண்டும் மீண்டும் மீளாய்வு செய்து பிம்சவி நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |
| i. | பிம்சவிய நிகழ்சித் திட்டம் 1998 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 26 ஆண்டுகள் கடந்துள்ள போதும், நிகழ்சித் திட்டம் ஆரம்பம் முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரை காலத்தினுள் அடைந்து கொண்டுள்ள பௌதீக முன்னேற்றம் மிகவும் பலவீன மட்டத்தில காணப்பட்டதுடன் உரிமை பதிவு செய்யும் சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் வரைபடத்திற்கான காணித் | | |

துண்டுகளிற்காக உரிமை கோரலை சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்டு வர்த்தமானியில் பிரசுறிக்கப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை 1,781,502 ஆனதுடன் அவற்றில் உரிமை கோருபவரிற்கு அந்த காணித் துண்டின் தனி உரிமை தொடர்பாக உரிமையுள்ளதாக குறிப்பிட்டு சட்டத்தின் 14 பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுறித்த காணித் துண்டுகளின் எண்ணிக்கை 947,414 ஆனது. இந்த அளவிலும் பதிவாளர் நாயகத்திடம் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட் காணித் துண்டுகளின் எண்ணிக்கை 822,668 ஆன போதும் இறுதி பெறுபேறாக பொது மக்களிற்கு 462,922 காணித் துண்டுகளிற்கு மாத்திரம் உரிமை சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இந்த அளவு மொத்த நிலஅளவை செய்யவுள்ள் காணித் துண்டுகளின் 2 சதவீத அளவாகும் எனவும் அவதானிக்கப்பட்டது.

ii. தீவு முழுவதும் இந்த நிகழ்சித் திட்டங்களின் கீழ் 16 மில்லியன் காணித் துண்டுகள் நிலஅளவை செய்ய காணப்படுவதாகவும் அந்த அளவில் 26 வருட காலத்தினுள் 2.1 மில்லியன் காணித் துண்டுகள் மாத்திரம் நிலஅளவை செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் நிலஅளவை செய்ய 13.9 மில்லியன் காணித் துண்டுகள் எஞ்சியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

iii. 2007 ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரை இந்த நிகழ்சித் திட்டத்திற்ககாக அரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 10,514 மில்லியனாக இருந்தது. 2024 திசெம்பர் 31 திகதி வரை மக்களிற்கு வழங்கியுள்ள உரிமை சான்றிதழ்களின் அளவு 462,922 ஆனதுடன் அதன் பிரகாரம் உரிமை சான்றிதழ் ஒன்றை வழங்க செலவிட வேண்டி ஏற்பட்ட செலவு அன்னளவாக ரூபா 21,978 ஆகவிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஆ) • பொது ஆவணங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவதற்காக அந்த ஆவணங்களை தேசிய ஆவணக் | 1897 இன் 01 இலக்க தரிசு நில கட்டளைகள் சட்டத்தின் கீழ் மற்றும் 1931 இன் 20 இலக்க காணி நிர்ணய கட்டளை சட்டத்தின் கீழ் | பொது மக்களிற்கு பயன்படுத்த முடியுமான விதத்தில் பழைய |

காப்பகத்திற்கு ஒப்படைக்கும் வரை ஆவணங்களிற்கு பொறுப்பாக செயற்படும் அலுவலகத்தில் பாதுகாத்து பொறுபில் வைத்திருக்க வேண்டுமென 1973 இன் 48 இலக்க தேசிய ஆவணக் காப்பக சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம் மற்றும் தாபன விதிக்கோவையின் xxviii 9.3/9.4 பிரிவுகளிலும் குறிப்பிட்டிருக்கையில் இந்த திணைக்களம் அதன் பிரகாரம் செயற்படாது ஆவணங்கள் அழிவடையும் வகையில் முறையற்று அந்த ஆவணங்கள் காப்பகத்தில் குவிக்கப்பட்டிருந்தன.

- பாதுகாக்கப்பட்ட இந்த ஆவணங்கள் கொள்ளவு குறைந்த கணனியினுள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த கணனியில் களஞ்சியப்படுத்தும் கொள்ளவு போதாமையின் மீது எஞ்சி தரவுகள் 01 டெரா பயிட் கொள்ளவு கொண்ட வெளி வன்தட்டொன்றில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தது. இந்த செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு 04 ஆண்டுகள் காலம் கடந்துள்ள போதும் வெளித்தரப்பினறிற்கு இந்த தரவுகளை பயன்படுத்த வசதிகள் வழங்கப்படவில்லை.

மேற்கொள்ளப்பட்ட கடமை பணிகளிற்குரிய கோவைகள் மற்றும் ஆவணங்கள் காப்பகத்தில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு பகுதி தேசிய ஆவணக் காப்பக திணைக்களத்திற்கு ஆவணக் பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் ஆவணக் காப்பகத்திலுள்ள ஆவணங்கள் மிகவும் பழமையானதுடன் பலவேறு நபர்கள் மற்றும் அரச நிறுவனங்களால் இந்த ஆவணங்களில் அடங்கும் தகவல்ளை கோரும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் ஆவணங்களை பாதுகாக்கும் தேவைப்பாட்டின் மீது ஸ்கேன் செய்து இலத்திரலியல் தன்மையில் மென் பிரதியாக களஞ்சியப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களின் மென் பிரதிகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் Backup File களில் வெவ்வேறாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் கட்டத்தில் ஸ்கேன் செய்யப்பட்ட மென் பிரதிகளை கணனி ஊடாக பயன்படுத்தக் கூடிய வகையில் Enadoc மென்பொருள் ஊடாக வசதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் ஸ்கேன் செய்யப்பட்ட கடித ஆவணங்களை பயன்படுத்த Server வசதிகளை இஸ்தாபிக்க வேண்டியதால் 2025 ஆண்டில் பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

ஆவணங்களை ஸ்கேன் செய்து பாதுகாக்க வேண்டும்.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு சொந்தமான இரத்மலானையில் அமைந்துள்ள உலக உணவு களஞ்சிய கட்டிடத்தொகுதியில் கட்டிடமொன்றை 03 பிம்சவிய அலுவலகங்களை அமைப்பதற்கு காணி உரித்து நிர்ணய திணைக்களத்தினால் பெறப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்தை அலுவகங்களை நடாத்திச் செல்லக்கூடிய வகையில் திருத்துவதற்காக கூட்டுத் தொகை ரூபா 10.42 மில்லியன் செலவிட்டு குறித்த திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2025 ஆண்டு வரை மூன்று பிம்சவிய பிரதேச அலுவலகங்ளையும் அந்த கட்டிடத்தில் நிறுவியிருக்கவில்லை. | இரதமலான தெஹிவலை மற்றும் மொரட்டுவ ஆகிய மூன்று அலுவலகங்களையும் உலக உணவு கட்டிடத் தொகுதியில் நிறுவுவதற்கு காணி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இரண்டாம் கட்டத்தின் கீழ் திருத்த வேலைகள் செய்வதற்கு தீர்மானித்து திருத்த வேலைகள் செய்யப்பட்ட போதும் அதிக வெப்பம் நிலை காரணமாக சேவைபெறுனர்கள் மற்றும் பதவியணியினர் சிரமப்படுவதால் இந்த கட்டிடத்தில் நிறுவப்பட்ட மொரட்டுவ பிரதேச அலுவலகமும் கோட்டே அலுவலகத்தை நடாத்திச் செல்லும் தெல்கந்தவில் அமைந்துள்ள ஹய்லெவல் பிலாசா கட்டிடத்திற்கு தற்காலிகமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பொது நிதியை செலவிடும் பொது திட்டமிடலுடன் செலவிட வேண்டும். |

### 4.3 முகாமைதுவ வினைத்திறமையின்கைள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி உரித்து நிர்ணய 04 பிரதேச அலுவலகங்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு பௌதீக கணக்காய்வு பரிசோதனை ஒன்றை செய்ததுடன் அந்த அலுவலகங்களில் விரல் அடையாள இயந்திரம் செயற்படாததுடன், மேற்பார்வை அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக அந்த அலுவலகங்களில் மேற்பார்வை செயற்பாடுகள் உரியவாறு இடம்பெறவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் அலுவலர்கள் நேரத்திற்கு கடமைக்கு வராமை, விடுமுறை அங்கீகரிக்கப்படாமை, வருகை பதிவேட்டில் நேரத்தை மாற்றுதல், வெளிச் செல்லும் பதிவேட்டில் குறிப்பு | ஏற்றுக் கொள்கிறேன். மேற்பார்வை அலுவலர்கள் பதிற்கடமை மற்றும் கள செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களில் மேற்பார்வை அலுவலர்கள் அலுவலகத்தில் தரித்திருப்பது கட்டாயமில்லை. அதன் பிரகாரம் பார்வையிட்ட தினங்களில் அந்த அலுவலர்கள் எந்த கடமைகளில் ஈடுபட்டார்கள் என்பதை வினவ குறித்துக் கொண்டேன். எதிர்காலத்தில் விரல் அடையாள இயந்திரத்தை பொருத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக் காட்டியவாறு எதிர்காலத்தில் | உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இட்டு கடமை மேற்கொள்ளாது வெளிச் செல்லல் கட்டுப்பாடின்றி இடம்பெறும் நிலைமை காணப்பட்டதுடன் அந்த நிலைமை காரணமாக காணி உரித்து நிர்ணய பிரதேச அலுவலகங்கள் ஊடாக மக்களிற்கு செய்யப்பட வேண்டிய சேவைகள் செய்யப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் நிகழ்சித் திட்டத்தை உரியவாறு செயற்படுத்த 57 பிரதேச அலுவலகங்களிற்கும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று செயற்படாத நிலைமையும் அவதானிக்கப்பட்டது. | மேற்கொண்ட நிகழ்சித் திட்டங்களை அழைப்பித்து ஆய்விற்கு அனுப்ப முன்கூட்டிய திட்டத்தின் மீது செயற்பட அறிவுருத்த குறித்துக் கொண்டேன். | |
| (ஆ) | 2023 ஆண்டிலிருந்து நிலஅளவை திணைக்களதினால் காணித் துண்டுகளை நிலஅளவையிட்டு ஒப்படைக்காத காரணத்தால் கெஸ்பேவ பிரதேச அலுவலக உத்தியோகத்தர்களிற்கு பணியாற்றுவதற்காக நிலஅளவை செய்யப்பட்ட காணித் துண்டுகள் இல்லாத நிலைமை அவதானிக்கப்பட்டதுடன் அக் காலத்தினுள் பிம்சவிய அலுவலகத்தில் நிரந்தரமாக கடமையாற்றும் அலுவலர்களிற்கு பணியாற்ற முடியாதிருந்தது. கடமை செய்யப்படாததால் அந்த அலுவலர்களிற்கு செலுத்திய ரூபா 9.14 மில்லியனான சம்பளம் மற்றும் ஊதியத்திற்கு பொருத்தமான சேவைகள் பெறப்படாத நிலைமை அவதானிக்கப்பட்டது. | பதில்கிடைக்கவில்லை. | அனுப்பப்பட்ட நிலஅளவை கோரிக்கைகளை துரிதமாக செய்து கொள்ள தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவ**

திணைக்களத்தில் அங்கீகார மற்றும் உள்ளவாறான பதவியணியினர் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|

| | அங்கீகார எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| | ----- | ---- | ----- |
| சிரேஷ்ட | 105 | 36 | 69 |
| மூன்றாம் | 07 | 05 | 02 |
| இரண்டாம் | 1746 | 844 | 902 |
| ஆரம்ப | 254 | 164 | 90 |
| **கூட்டுத் தொகை** | **2112** | **1049** | **1063** |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிம்சவிய நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக இப் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதும் அதன் அங்கீகார பதவியணினரை ஆட்சேர்த்து சேவை நிலையங்களை நிறுவி கடமை பணிகளில் அமர்த்த இயலாதிருந்தது. பதவிகளிற்கு அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்டால் அந்த அலுவலர்கள் நாடு முழுவதுமுள்ள அலுவலகங்களிற்கு இணைக்கப்படாமையும் ஆட்சேர்த்த அலுவலர்களிற்கு கடமை பணிகயை உரியவாறு மேற்கொள்ள தேவையான குறைந்தபட்ச வசதிகளையேனும் வழங்க முடியாத காரணத்தால் பிம்சவி நிகழ்சித் திட்டத்தின் மொத்த செயலாற்றுகையும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 1931 இன் 20 இலக்க காணி நிர்ணய கட்டளை சட்டத்தின் மற்றும் 1998 இன் 21 இலக்க நிர்ணய பதிவுச் சட்டம் எனும் இரண்டு சட்டங்களையும் செயற்படுத்துவதற்காக முகாமைததுவ சேவைகள் திணைக்களத்தினால் அவ்வப் போது ஆளணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். திணைக்களத்திற்கு கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டு அளவினால் பிரதேச அலுவலகங்களிற்கு தேவையான வசதிகள் படிகப்டியாக நிறைவு செய்யப்படுகின்றது. | அலுவலர்களை தேவைக்கு ஏற்ப ஆட்சேர்க்க வேண்டும். |
| (ஆ) | பிதேதச அலுவலகங்களிற்கு மேற்பார்வையாளர்களாக 13 பதிற்கடமை பதவிகளிற்கு உதவி பிரதேச செயலாளர்கள் போன்று காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 16 அலுவலர்கள் பதிற்கடைமை பதவிகளிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்காக 2024 ஆண்டினுள் கொடுப்னவு செய்துள்ள | நிர்ணய பதிவுச் சட்டத்தின் இரண்டாம் ஏற்பாட்டின் பிரகாரம் பணிகளை மேற்கொள்ள பிரதி மற்றும் உதவி காணி நிர்ணய ஆணையாளர்களை நியமிக்க நடவடிக்கை | அலுவலர்களை தேவைக்கு ஏற்ப நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்க்க வேண்டும். |

தொகை ரூபா 2.51 மில்லியன் ஆகுமென அவதானிக்கப்பட்டது.

எடுககப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தகைமையுடைய அலுவலர்கள் பொது சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதி பிரகாரம் பதிற்கடமையில் அல்லது கடமை மேற்கொள்ள நியமித்து பயிற்சி மற்றும் தொடர்சியான மேர்பார்வை மேற்கொள்ளப்படுவதால் முன்னேற்றத்தை அடையும் போது குறைவின்றி கடமை பணிகள் மேற்கொண்டு செல்லப்படுகின்றன.